கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

திட்டக்குடி.

**OS.144/2016 DW: 3 03.03.2026**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 03 நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய கலியபெருமாள் என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலியபெருமாள் | வயது | 82 |
| த/க. பெயர் | நாராயணசாமி | தொழில் | ஆவண எழுத்தர் |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | திட்டக்குடி |
| மாவட்டம் | கடலூர் | | |

**முதல் விசாரணை**

நான் சுமார் 40 ஆண்டுகளாக ஆவண எழுத்தராக உள்ளேன். நான் திட்டக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எழுத்தராக இருந்து வருகிறேன். எனக்கு இந்த நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சம்மன் கிடைக்கப்பெற்றது. சம்மனில் உள்ள விவரத்தை நான் படித்து பார்த்து தெரிந்துகொண்டேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.த.சா.ஆ.4 ஆவணத்தை நான் தான் எழுதினேனா என்றால் சரிதான். அந்த பத்திரத்தை நான் 1987 ல் எழுதியுள்ளேன். நான் என் கைப்பட அந்த பத்திரத்தை எழுதியுள்ளேன். அந்த பத்திரத்தில் யார் கிரையம் கொடுத்தார் என்றால் சாமிக்கண்ணு மற்றும் பரமசிவம் கிரையம் கொடுத்தனர். அதில் யார் கிரையம் பெற்றார் என்றால் ராணி. அதில் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் நாராயணசாமி , த.பெ.ரங்கசாமி மற்றும் சிவசாமி. இந்த நீதிமன்றத்தில் தற்போது சிவசாமி ஆஜராகி உள்ளாரா என்றால் ஆஜராகி உள்ளார். கிரையம் கொடுத்தவர்களும், சாட்சிகளும் என் முன்பு தான் கையெழுத்து போட்டார்கள். கிரையம் கொடுத்தவர்களும், சாட்சிகளும் கையெழுத்து போட்ட பிறகு தான் நான் கையெழுத்திட்டேன். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பி.வா.த.சா.ஆ.4 ல் என்னுடைய கையெழுத்து தான் உள்ளது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

வாதிக்கு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI

Digitally signed by N SHALINI
Date: 2026.03.03 16:53:37 +0530

Additional District Munsif,
Tittagudi.